**<u>ந.க.எண்: 307/2010</u>** **<u>நாள்: 14.06.2010</u>**

## <u>தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி</u>
## <u>சேலம் மாவட்டம்</u>

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி **2010–11ம் ஆண்டு நமக்குநாமே திட்டத்தின் கீழ்** கீழ்க்கண்ட பணிகளை செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு **22.06.2010**ம் தேதி **செவ்வாய்க்கிழமை** மாலை **3.00** மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் நேரில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் **மாலை 3.30** மணியளவில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.) | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்த புள்ளி படிவத் தின் விலை ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2வது வார்டு ஜங்ஷன் மெயின்ரோடு முதல் ஸ்ரீஜோதி மேல்நிலைப்பள்ளி வழியாக ஏற்கனவே உள்ள சிறுபாலம் வரை வடிகால் அமைத்தல் | 20,00,000/- | 40000/- | 6750/- | 90 நாட்கள் |
| 2. | 14வது வார்டு சுரேஷ் வீடு முதல் ஏற்கனவே உள்ள சாலை வரை மற்றும் குறுக்குத் தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 7,00,000/- | 14000/- | 3375/- | 90 நாட்கள் |

### <u>நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தபுள்ளி படிவம் வேண்டுவோர் தாரமங்கலம் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் உரிய விண்ணப்பம் கொடுத்து **21.06.2010**ந் தேதி **பிற்பகல் 2.00** மணி வரை தொகை ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தபுள்ளியின் வேலைக்கான முன் வைப்புத் தொகையை தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் **21.06.2010**ந் தேதி **பிற்பகல் 2.00** மணிக்குள் ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்று ஒப்பந்தபுள்ளி படிவத்துடன் இணைத்து கொடுக்க வேண்டும்.
3. எக்காரணம் கொண்டும் குறிப்பிடப்பட்டுள்ள காலக் கெடுவுக்கு மேல் ஒப்பந்தபுள்ளி படிவங்கள் வழங்கப்பட மாட்டாது மற்றும் முன் வைப்புத் தொகை ஏற்றுக் கொள்ளப்பட் மாட்டாது.
4. வேலைக்கு தேவையான சிமெண்ட் மற்றும் இதர பொருட்களை ஒப்பந்ததாரர் தன் சொந்த செலவில் வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான உரிய பட்டியல்களை சம்மந்தப்பட்ட பொறியாளரிடம் வேலைக்கான பட்டியல் தயாரிக்க கொடுத்து கொள்ள வேண்டும்.
5. குடிநீர் பணிக்கு தேவையான குழாய்கள் மற்றும் இதர பொருட்கள் துறை மூலம் வழங்கப்படும்.
6. பணிகளை துவங்கும் முன், நடைபெறும் பொழுதும் மற்றும் பணி முடிந்த பின்னர் புகைப்படம் தவறாது எடுக்கப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படங்களும் ஒரே இடத்தை சுட்டிக் காட்டும் படியாக இருத்தல் வேண்டும்.

(தொடர்ச்சி..2)

7. தொழில்நுட்ப அலுவலர்களின் அறிவுரைப்படி பணியினை மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. டெண்டரை ஏற்கவோ, நிராகரிக்கவோ, டெண்டரை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.
9. டெண்டர் மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே பணி உத்திரவு வழங்கப்படும்.
10. இதர விவரங்களை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

***(ஒம்) திரு.ஆர்.பெரியசாமி,***
***செயல் அலுவலர்,***
**தேர்வுநிலை பேரூராட்சி,**
**தாரமங்கலம்.**

**பெறுதல்:**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி.

**நகல்:**

1. இளநிலைப்பொறியாளர், ஓமலூர் பேரூராட்சி தொகுப்பு.
2. உதவி செயற்பொறியாளர், சேலம் மாவட்டம் சேலம்.
3. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், சேலம் மண்டலம், சேலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4. அலுவலக விளம்பர பலகைக்கு.